[1981 ஏப்ரல் 14 [டாக்டர். இரா. நெடுஞ்செழியன்]

திருமதி காந்தா சாப்பிட்டுவிட்டு தன் வேலைகளை முடித்துக் கொண்டு அதே அறையில் வந்து கீழே படுத்துக் கொண்டார். இவர்களைத் தவிர அப்பொழுது வீட்டிலிருந்த ஒரே நபரான திருமதி காந்தாவின் மகன் 11 வயதான அருள் ஜோதியை தர்மராஜ் பாண்டியன் பக்கத்திலிருக்கும் கடைக்குச் சென்று வயிற்று வலி மாத்திரைகள் இரண்டு, வாங்கி வரும்படி அனுப்பி இருக்கிறார். அந்தப் பையன் வெளியே சென்றதும், ஏற்கனவே பேப்பருக்குள் சுருட்டி வைத்திருக்கும் சிறு கடப்பாறை ஒன்றை எடுத்து உறங்கிக் கொண்டிருந்த காந்தாவின் தலையில் ஓங்கி பல முறை அடித்து அவரைக் கொன்றுவிட்டு, அவர் கழுத்திலிருந்த 13 பவுன் கோதுமை தங்க சங்கிலி ஒன்றையும், இரு கம்மல்களையும் கழற்றிச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. வீட்டிற்குத் திரும்பிய அருள்ஜோதி தன் தாய் ரத்த வெள்ளத்தில் கிடப்பதைப் பார்த்து அவலக் குரல் எழுப்ப அதன் பிறகு தகவல் கிடைத்து போலீசார் அங்கு சென்று புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விசாரணையில் திரு. தர்மராஜ் பாண்டியன், வேல்முருகனின் குடும்பநண்பர் என்பதும், அடிக்கடி வேல்முருகனைப் பார்க்க வந்து போகும் வழக்கம் உண்டு என்றும் தெரிய வந்துள்ளன. இவர் மன்னார்குடியில் வேளாண்மைத் துறையில் 'போரிங் மெக்கானிக் காகப்' பணியாற்றி வந்தார் என்றும் தெரிய வந்துள்ளது.

[முற்பகல் 10.10]

இப்போது அவர் தலைமறைவாக உள்ளார். அவரை விரைந்து பிடிப்பதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே இந்தச் சம்பவம் காரணமாக இப்போது ஏதும் பதட்ட நிலைமை இல்லை. விரைவாக குற்றவாளியைப் பிடிப்பதற்கான முயற்சிகளைக் காவல் துறையினர் தீவிரமாக மேற்கொண்டு உள்ளனர். எனவே பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

6. கவன ஈர்ப்புகள்.

அ. தஞ்சை சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் ஊழியர்கள் சம்பளம்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டத்தில் சோதனைச் சாவடிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு சென்ற 3 மாத காலமாக ஊதியம்

அளிக்கப்படாதது குறித்து'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை

தலைவர் அவர்களே, 20—1—1981 முதல் மாநிலம் முழுவதும் நெல் வர்த்தக லெவி அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. லெவி செலுத்தப்பட்ட நெல் மட்டுமே வேறு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறதா என கண்காணிக்க மாநில மாவட்ட எல்லைகளில் மொத்தம் 276 லெவி சோதனைச் சாவடிகள் நியமிக்கப்பட்டன. தேவைக்கேற்ப ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் மூன்று அடிப்படை ஊழியர்களுடன் மூன்று துணை தாசில்தார்கள் அல்லது மூன்று வருவாய் ஆய்வாளர்கள் அமர்த்தப்பட்டனர். அவசரத்தின் காரணமாக மாநிலம் முழுவதும் உள்ள சோதனைச் சாவடிகளுக்குத் தேவையான அலுவலர்களை 20-1-81 முதல் நியமித்துவிட்டு அரசின் ஒப்புதல் கோரப்பட்டது. பணியாளர்கள் நியமனங்களை ஏற்று பணியிடங்களுக்கு 20-1-81 முதல் 30-4-81 வரை அரசு அனுமதி 30-3-1981 அன்று வழங்கப்பட்டது. இந்த செலவினம் புதுப் பணித் திட்டத்தின் கீழ் வருவதால் இச்செலவினத்தை எதிர் பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெற வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பணியாளர்களுக்குத் தேவையான சம்பளப்பணம் எவ்வளவு என்ற விபரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உணவுப் பொருள் வழங்கு துறை ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். அத்தகவல்கள் உடனடியாகச் சேகரிக்கப்பட்டு உணவுப்பொருள் வழங்கு துறை ஆணையாளர் அலுவலர்களுக்கு விரைவில் சம்பளம் பட்டுவாடா செய்வார். ஆகவே நடைமுறையிலே ஏற்பட்ட காலதாமதந்தானே தவிர வேறல்ல. விரைவிலே அவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, பட்டினியாகக் கிடக்கும் குடும்பங்களுக்கு உடனடியாக அரசு ஏதாகிலும் உதவி செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, வேலையிலே அவர்களை 20ம் தேதி தான் சேர்த்தோம். ஆர்டர் அரசினுடைய அனுமதியில்லாமலே சேர்க்க வேண்டியிருந்தது. அதற்குப் பிறகுதான் அரசினுடைய அனுமதி பெறப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அதற்காக சட்டமன்றத்திலே ஒதுக்கீடு செய்யப்படவில்லை. பிறகுதான் ஒதுக்கீடு செய்தோம். மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அந்தக் கணக்குகள் எல்லாம் வந்ததற்குப் பிறகு அதை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு 3மாதசம்பளம் சேர்ந்து வரும். ஆகவே பட்டினி என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை. வேலையில்லாமல் இருந்தார்கள். அவர்கள் வேலையிலே

இப்போது சேர்க்கப்பட்டு விட்டார்கள். 3 மாத சம்பளம் கிடைக்காமலிருந்தால் கஷ்டம்தான் என்பதை அரசு உணர்கிறது. விரைவில் கிடைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் ஒதுக்கீடு ஏதோ செய்து கொடுப்பதாகக் கூறியிருக்கிறாரே, அது குறித்து அரசுக்குத் தெரியுமா.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் இல்லை. அவர்களுடைய பட்டியல்கள் எல்லாம் வந்தபிறகு உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஆ. இராணிப்பேட்டையில் குடிநீர் பற்றாக்குறை.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ''இராணிப்பேட்டை ஆற்காட்டிற்குப் பொதுவாக உள்ள குடிநீர் திட்டத்தைத் தனித் தனியாகப் பிரித்து இராணிப்பேட்டையில் குடிநீர்ப் பற்றாக் குறை நிலையை நீக்கும் பொருட்டு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்றை வக்கிறேன்.

அறிக்கை

வடஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை, ஆற்காடு ஆகிய நகராட்சிகளுக்கான கூட்டு குடிநீர் திட்டம் ஒன்றிற்கு அரசு 1956-ஆம் ஆண்டு அனுமதி அளித்தது. த்திட்டம் 1957-ஆம் ஆண்டு முதல் அமுலிலிருந்து வருகின்றது. இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு ஆதாரம் பாலாறு ஆகும். இந்த திட்டத்தின் ழ் உச்ச கட்ட மக்கட் தொகை (1986), இரண்டு நகராட்சி களுக்கும் முறையே 40,000 எனக் கணக்கிடப்பட்டு, மொத்த குடிநீர்க் தேவை நாளொன்றுக்கு 36.4 இலட்சம் லிட்டர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு மொத்த மதிப்பீடாகிய ரூ.12.15 இலட்சத்தில் ரூ 6.34 லட்சம் ஆற்காடு நகராட்சியும், ரூ.5.81 லட்சம் ராணிப்பேட்டை நகராட்சியும் ஏற்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2. தற்போது ஆற்காடு நகராட்சிக்கு தினசரி 27.55 லட்சம் லிட்டர் குடிநீரும் ராணிப்பேட்டை நகராட்சிக்கு தினசரி 10.9 லட்சம் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது,

3. எனினும் ஆற்காடு நகராட்சியின் மக்கட்தொகை எதிர் பார்த்ததைவிட கூடுதலாகிவிட்ட காரணத்தினால் ஓர் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் உருவாக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதின் காரணமாக அரசு 1974-ஆம் ஆண்டு ரூ. 29.40 லட்சத்திற்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ஒன்றை அமுலாக்க